மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிப்பதிவுச் சிறு பேழைப் பதிவுக் கருவிகள் (VCRs) மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி அமைப்புக் கோவையின் மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்கள் காட்டுதலை (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 47/1993) திருத்தப்பட்டபடி நிறைவேற்றப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு திருத்தப்பட்டபடி ஏற்கப்பட்டது.

(எ) திறந்தவெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளியிடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண்.3/1994) மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளியிடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1994) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

@ 3-1-1994 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பிற்பகல் 1.35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி, பேசுகிறீர்களா ?

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசுகிறேன். திறந்தவெளி அழகினைக் கெடுக்கும் திரையரங்கு போஸ்டர்களை ஒட்டுகின்றதைத் தடுக்க அந்த சட்டமுன்வடிவை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். இதே மாமன்றத்திலே இதற்கு முன்னாலும்கூட நகரங்களில் மிகப்பெரிய கட்அவுட் கள் ஒட்டுநருடைய கவனத்தைக் குறைக்கிறது. இது போன்ற சட்ட முன்வடிவை இந்த அவையிலே கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இதுவரையிலே அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. தமிழகம் முழுவதும் அதுபோன்ற தனியார் இடம், பொது இடங்களிலே போஸ்டர்கள் கலாச்சாரமாகவே தமிழகம் இன்றைய தினத்திலே மாறியிருக்கிற நிலையில், இது போன்ற சட்டங்கள் வருகிறதே தவிர, நடைமுறைக்கு சாத்தியம் இல்லாத ஒரு சட்ட முன்வடிவாக இது அமைந்திருக்கிறது. ஆக அரசால் ஒதுக்கக்கூடிய, அரசால் விளம்பரப்படுத்தக்கூடிய இடங்களில் மட்டும் ஒட்டுகிற முறையில் இந்தச் சட்டத்தை நீங்கள் அமல்படுத்த முடியும். இல்லை என்று சொன்னால், அநேகமாக தனியார் இடத்தில் கூட—ஏற்கனவே இதே மாமன்றத்தில் அரசாங்கத்தினிடத்திலே அனுமதி பெற்றுத்தான் விளம்பரம் செய்யவேண்டுமென்ற நிலை கூட இருந்தது. இன்றுகூட நம்முடைய காவல்துறை அதிகாரிகள் எப்படி அனுமதித்தார்கள் என்று தெரியவில்லை. அண்ணா சாலையில் மிகப் பெரிய போக்குவரத்து நெருக்கடி இருக்கிற இடத்திலே மிகப் பெரிய பீ.பி.எல். டி.வி.யினுடைய விளம்பரத்தை, ஒரு சிக்னலை மறைத்துகூட வைத்திருக்கிறார்கள். இதிலே என்னவென்றால், என்ன சிக்னல் வருகிறது என்று கூட தெரியாத அளவிற்கு அந்த போர்டு இன்றைய தினத்திலே அங்கே இருக்கிறது. ஆக அப்படிப்பட்ட நிலைமையில், இன்னும் நடவடிக்கை எடுக்கமுடியாத சூழ்நிலைமைகூட சென்னை நகரிலே இருக்கிறது. அநேகமாக நம்முடைய மவுண்ட் ரோடிலே இதுபோல இருக்கின்றன. அதே போன்றுதான் இன்றைக்கு திரைப்பட போஸ்டர்களை பல்வேறு இடங்களில் ஒட்டக்கூடிய நிலை இருக்கிறது. இந்தச் சட்டம் வருகிறபோது, அதை நடைமுறைபடுத்துகிற வகையில் நீங்கள் நடைமுறைப்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. நீங்கள் இந்தச் சட்டத்திலே என்ன சொல்கிறீர்கள் என்றே சொல்லவில்லையே. வேறு சட்டத்தில் பேசுகிறீர்களே. இந்தச் சட்டம் ஏற்புடையதுதானே. அதாவது இன்னொரு சட்டம் சரியான முறையில் நடைமுறைப்படுத்தவில்லை என்கிறீர்கள். அதையெல்லாம் நடைமுறைப்படுத்தவேண்டும் என்றுதான் பேசினீர்கள். இந்தச் சட்டம் ஏற்புடையது அல்லவா ?

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற சட்டங்களை நாம் கொண்டு வந்து நடைமுறைப் படுத்தியிருக்கிறோம். ஆனால் அது நடைமுறைக்கு சாத்தியம் இல்லாமல் இருக்கிறது. திரைப்படங்கள் போஸ்டர்கள் அது போல இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாப் போஸ்டருக்கும்தான். திரைப்பட போஸ்டருக்கு மட்டுமல்ல.

திரு. ஜி. பழனிசாமி: இது நடைமுறைக்கு சாத்தியம் இல்லாமல் இருக்கிறது என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்லவேண்டுமானால் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழக அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துப் பேருந்துகளில் அதிகமாக நோட்டீஸ்கள் ஒட்டப்படுகின்றன. அதற்குப் பெயரே வால் போஸ்ட்டர், சுவரொட்டி. ஆனால் சுவரில் ஒட்டவேண்டிய அந்த சுவரொட்டிகளை பேருந்திலே ஒட்டுகின்ற காரணத்தினாலே, பேருந்துகளுடைய அழகு கெடுக்கப்படுகிறது என்பது மட்டுமல்ல, அந்தப் பேருந்துகளுடைய கலர் கூட மங்கிப்போகின்றது. அப்படி வால் போஸ்டர்களை பேருந்துகளில் ஒட்டுவதால் போக்குவரத்துக் கழகத்தை சார்ந்த பேருந்துகளில் ஒரு ஆண்டுக்கு ஏறத்தாழ இரண்டரை கோடி ரூபாய்க்கு இழப்பு ஏற்படுகிறது. ஆகவே வால் போஸ்ட்டர்களை பேருந்திலே ஒட்டக்கூடாது.

அப்படிச் செய்தால், அதன் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற அடிப்படையிலே, தான் இந்தச் சட்டத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறோம். அது மாத்திரமல்ல, அந்தப் போஸ்ட்டர்களின் மூலம் தொத்து கிருமிகளால் பல நோய்கள் ஏற்படக்கூடும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே மக்களைப் பாதுகாக்கவேண்டும் என்ற அடிப்படையிலே, மக்களை ஏற்றிச்செல்கின்ற பேருந்துகளிலே போஸ்டர்களை ஒட்டக்கூடாது என்ற நல்ல எண்ணத்திலே இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்து நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். இதை மீறுபவர்கள் மீது ஒரு வருடம் சிறைத் தண்டனை அல்லது 5 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என்று, தீவிரமாக இந்தச் சட்டத்தை அமல்படுத்தவேண்டும் என்ற நல்ல எண்ணத்திலேதான் கொண்டுவந்திருக்கிறோம். ஆகவே மக்களைப் பாதிக்காத வகையில், மக்களுக்குப் பயன்படுகிற பேருந்துகளுடைய அழகு

கெடாத வகையிலே இருக்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்திலே இந்தச் சட்டத்தை கொண்டு வந்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்த சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1.40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 முடிய சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளியிடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.3/1994) நிறைவேற்றப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) தொழிலாளர் நல நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1993

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.49/1993). மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதியச் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 49/1993) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

@ 31-12-93 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.